இனம்
இனம் இனத்தைச் சேரும்
ISSN : 2455 - 0531
Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com
UAN.TN03D0061112
பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies
இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!
மலர்:4 இதழ்:14 ஆகஸ்ட் 2018 Vol. 4 Issue : 14 August 2018



சி.சங்கீதா
பா.ஈஸ்வரன்
ச.கண்ணதாசன்
அரி.வே.விஸ்வேஸ்வரன்
இரா.வசந்தமணி
தி.மல்லிகா
கி.ரேவதி
பா.கலையரசி
அ.மரிய செபஸ்தியான்
சி.அம்சவேணி
சே.முனியசாமி
ஆ.ஈஸ்வரன்
க.பாலாஜி
ந.இராஜேந்திரன்
ம.பாபு
தி.நிரஞ்சனி
இரா.அருணா
சி.சாவித்ரி
அ.அனேஜா
வி.வசந்தா
ப.சண்முகராணி
த.சத்தியராஜ்

*Inam* *ISSN : 2455 - 0531*

UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

*An Internationally Refereed e_ Journal of Tamil Studies*

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

ஆகஸ்ட் 2018 மலர் : 4 இதழ் : 14
*August 2018 Volume IV Issue 14*

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

தொல்காப்பியமும் திருக்குறள் களவியலும்
முனைவர் சி.சங்கீதா | 4

ஐங்குறுநூற்றில் மலர்கள் வருணனை
முனைவர் பா.ஈஸ்வரன் | 9

பத்துப்பாட்டுப் பதிப்புருவாக்கத்தில் உ.வே.சாமிநாதையர்
முனைவர் ச.கண்ணதாசன் | 13

வேதசாத்திரங்களின் கருத்துகள் திருக்குறளின் அடிப்படையில் திரிக்கப்பட்டவையே
அரி.வே.விஸ்வேஸ்வரன் | 18

பழங்காலத் தமிழர் வாழ்வியலும் அறிவியல் பொருட்புலங்களும்
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 24

புலிகொல் யானை
முனைவர் தி.மல்லிகா | 34

சங்கத் தமிழரின் நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகள்
கி.ரேவதி | 37

### பக்தி இலக்கியம்

திருமூலரின் இரந்தார்க்கீதல்
முனைவர் பா.கலையரசி | 41

### தற்கால இலக்கியம்

தீர்ந்த சுனை, காய்ந்த பனை, நேர்ந்த வினை - ஒத்திகை விஜய்யின் "மாள்வுறு நாடகம்" : பார்வையாளர் நோக்கு
முனைவர் அ.மரிய செபஸ்தியான் | 45

பெண்மொழியும் பண்பாட்டுக் கூறுகளும்
முனைவர் சி.அம்சவேணி | 54

...

UGC APPROVED JOURNAL NO: 64244


IIJIF
INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR
DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301
office@iijif.com
https://iijif.com/
This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE
OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]
THIS CERTIFICATE IS PRESENTED TO
Inam: International E-Journal of Tamil Studies
e-ISSN: 2455-0531
The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.
Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321
MANAGER

## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரும் அவர்தம் கவிப்புலமையும்**

சே.முனியசாமி | 65

**கிழக்கிந்திய தாந்திரீகப் பாடல்கள்**

முனைவர் ஆ.ஈஸ்வரன் | 78

**பெருங்கற்காலக் கற்பதுக்கைகள் - தொல்லியல் கள ஆய்வு**

முனைவர் க.பாலாஜி | 91

**எட்டிசேரி : பெருங்கற்காலச் சமூகத்தின் வாழ்விடம்**

முனைவர் ந.இராஜேந்திரன் | 108

**காலத்துக்குக் காலம் மாறும் கலைப்பாணிகள்**

முனைவர் ம.பாபு | 115

**பகுப்பாய்வு மெய்யியலில் மொழி : சமகால மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு**

திரவியராசா நிரஞ்சினி | 121

**இலக்கணம் கற்றல் முறையில் வரைபடங்களின் பங்கு**

இரா.அருணா | 132

**ஒப்பீட்டு நோக்கில் தமிழ் - தெலுங்கு இலக்கணங்களும் இன்றைய ஆய்வு போக்குகள்**

முனைவர் சி.சாவித்ரி | 138

**தண்டனைக் கொள்கைகளும் அவற்றின் நடைமுறைப் பொருத்தப்பாடும்**

அரியரெத்தினம் - அனேஜா | 148

**வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஏற்படுத்தும் விளைவுகள்**

வினாயகமூர்த்தி - வசந்தா | 163


## கணினித்தமிழ்


**இணையப் பயன்பாட்டுக் கற்றல்வழித் தமிழ் வளர்ச்சி**

முனைவர் ப.சண்முகராணி | 174


## நூல் மதிப்பீடு


**‘ஓடியன்’வழி இருளர்கள் : அறிமுகம்**

த.சத்தியராஜ் | 177


…

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 ஆகஸ்ட் 2018 மலர்:4 இதழ்:14 65

மதிப்பிடப்பெற்றது

# முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரும் அவர்தம் கவிப்புலமையும்

சே.முனியசாமி
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஜெ.பீ. கலை அறிவியல் கல்லூரி
அகரக்கட்டு, ஆய்க்குடி, தென்காசி - 627852
மின்னஞ்சல்: muniyasethu@gmail.com

*Abstract*: *Poets play a significant role in the new creation of Literature. Many Tamil poets have contributed for the new creation of Tamil literature. Mudukulathur Sarvana perumal kavirayars Literary works were written before hundred years. During his period chitrilakkiyam reached the target milestone. So his works are considered in the form of chitrilakkiyam. He belongs to the period of saiva's. His speciality of writings known for his humour and imagination. He is one of the major disciples of king muthuramalinga sethupathi kingdom.*

*He had a divine power of singing poems like poet kalamega puzhavar. He is known for expressing his ideas with the rhyming words by following regular grammar. He was very bold and fearless. He is a way of expressing his eight books and single poems were unable to find. But his works were traced in some of others literary works. This paper is prepared by using those available resources.*

இலக்கியங்கள் உருவெடுப்பதில் புலவர் பெருமக்களுக்கு நெடிய பங்குண்டு. பலநூறு புலவர் பெருமக்களின் மதிநுட்பத்தின்பொருட்டு உருவானவையே தமிழ் இலக்கியங்கள் என்று கூறினால் அது மிகையாகா. அவ்வகையில், முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரின் இலக்கியங்கள் சில நூற்றாண்டுகளைக் கடந்தவை. இவரது காலத்தில் சிற்றிலக்கியங்கள் வேரூன்றி வளர்ச்சியின் எல்லையை அடைந்தவை. ஆக இவரது படைப்புகள் சிற்றிலக்கியங்களாகவே அமைகின்றன. இவரைப் பற்றியும் இவரது கவித்திறமை பற்றியும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை விளங்கும்.

## புலவர் பரம்பரை

திருக்குறளுக்கு உரை செய்த பதின்மரில் பரிமேலழகர் பிறந்த மாவட்டம் காஞ்சிபுரம் என்பது அறிஞர் பலர் கருத்து. பரிமேலழகர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனும் கருத்தும் நிலவுகின்றது. இதனை " *'பாரில் பரித்த உரையெல்லாம் பரிமேலழகர், தெரித்த உரையாமோ தெளி'* என்ற **சிறப்பிற்குரியதோர் உரையைத் திருக்குறளுக்கு வகுத்துத்தந்த பரிமேலழகர் தோன்றிய ஊரும் இவ்விராமநாதபுரப் பகுதியாகும் இத் திருப்புல்லாணித் தலத்திற்கும், சேதுக்கரைக்கும் இடையில் உள்ள ஊர் சின்னக் கோவிலாகும்"**[1] என்னும் கூற்றின்வழி அறியலாம்.

இம்மாவட்டத்தின்கண் முதுகுளத்தூர் எனும் ஊரானது பல புலவர் பெருமக்களைப் பெற்றெடுத்த சிறப்பிற்குரியது. அதுமட்டுமின்றி முதுகுளத்தூர் புலவர் என்றாலே உடனே நினைவுக்கு வருவது சரவணப்பெருமாள் கவிராயரே. (பெரிய) அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் **(தாத்தா)**, (சிறிய) சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர்**(பேரர்)** என இருவர் உண்டு.

இவரது மகன் அருணாச்சலக் கவிராயர். இவர்கள் சேது நாட்டுப் புலவர் பரம்பரையின்வழி வந்தவராவர்.

சரவணப்பெருமாள் கவிராயர் அட்டாவதானம் செய்பவராதலின் அத்தகைய அடையை இவர் பெயருக்குமுன் வைத்து வழங்குவதுண்டு. அட்டாவதானம் என்பது ஒரே சமயத்தில் எட்டு விதமான வெவ்வேறு செயல்களில் கவனம் செலுத்தும் கலை. (அட்டம் - எட்டு)

இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். நகைச்சுவை நயம் விளங்கக் கற்பனை அமைத்துத் தனிப்பாடல்கள் பாடுவதில் மிக்க வல்லவர். இவரைப்பற்றி **“வசைமொழிகளைத் தொகுத்துரைப்பதில் இவரைவிட வல்லவரில்லை; தமது செருக்குத் தோன்றப் பாடுவதிலும் அங்ஙனமே. இவர் உலக வழக்கிலுள்ள மொழிகளையே அமைத்துத் தட்டுத் தடையின்றி பாவியற்றும் திறமுடையவர்”**[2] என்று கா.சு.பிள்ளை குறிப்பிடுகின்றார்.

முதுகுளத்தூர் பொன்னம்பலப் புலவர் இவரது பரம்பரையைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது காலம் 180 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். சேது நாட்டு மன்னரான முத்துராமலிங்க சேதுபதியின் சமஸ்தான வித்துவானாக இருந்துள்ளார். இவரிடம் தெய்வப் புலமையிருந்ததால் காளமேகம் போல் கவிபாடும் திறம் பெற்றவர் என்பது இவரின் சிறப்பாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்த சிவஞான முனிவரின் மாணவர்கள் பன்னிருவர். அவர்களுள் சிதம்பரநாத முனிவர், கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், சோமசுந்தர பிள்ளை, சங்கரமூர்த்திக் கவிராயர் ஆகியோர் அடங்குவர். மேற்சுட்டியவர்களில் ஒருவரான சோமசுந்தர பிள்ளையின் மாணவராகத் திகழ்ந்தவர் சரவணப்பெருமாள் கவிராயர். சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர், வெண்பாப்புலிப் புலவர், பாலசிங்கக் கவிராயர் ஆகியோர் சரவணப்பெருமாள் கவிராயரின் சமகாலப் புலவர்கள் ஆவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கவிபாடும் மதிநிறையர்கள் கணக்கிலடங்கார். சிலர் மோனையும் எதுகையும் அமைந்ததே கவிதையெனக் கருதுவது உண்டு. சிலர் பாக்களில் கருத்துக்களை மட்டும் ஒளித்துவைத்து, தம் சொல்வன்மையால் பாக்களை நிரல்பட அழகுபடுத்துவதுண்டு. இதே நூற்றாண்டில் இலக்கண வரம்பு மீறுதலின்றியும், சொல்லழகும், பொருளழகும் குறைவின்றிப் பாடல்களை இயற்றுவதில் தனித்தடம் பதித்தவர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர். இவரின் கவிச்சிறப்பினைப் போற்றும் முகமாக **“பல தெய்வங்களைப் பற்றிய துதிகளோடு தமது ஆற்றல் தெரியாதாரிடம் சரவணப் பெருமாட் கவிராயர் போலத் தற்புகழ்ச்சியை அழகாகப் பாடுமுறை, உலகியலைப் படமெடுத்துக் காட்டுவது போன்ற லோபிகிளி னியல்பு, வறுமையின் அல்லல், மாதர்களி னியற்கை நுட்பங்கள், கள், ஊனுண்பாரது இயல்பு, கால மழையின் கபடம், துறவிகளின் வஞ்சக வொழுக்கம், அகத்துறை நயங்கள், மனித வியற்கை நுட்பங்கள் முதலிய அரும் பல பொருள்களின் வருணனை இயற்கையை இற்றெனக் கிளக்கும் சிறப்பு வாய்ந்திருப்பன”** [3] எனச் சிறப்பித்துக் கா.சு.பிள்ளை கூறுகின்றார். மேலும், **“வண்டமிழ்நா வலர் பலருட் சிறந்தசர வணப்பெருமாள் வலவன் முன்னே”** [4] என முதுகுளத்தூர்ப் புலவர் சுப்பையா பிள்ளை இயற்றிய புவனேந்திர காவியத்திற்குச் சிறப்புப்பாயிரம் பாடிய எம்.கே.எம். அப்துல்காதிறு ராவுத்தர் இவரின் தமிழ்ப் புலமையைச் சுட்டுகின்றார்.

**சீட்டுக்கவித் திறம்**

சரவணப்பெருமாள் கவிராயர் சீட்டுக்கவி பாடுவதில் வல்லவர். சீட்டுக்கவி என்பது தமிழ் மொழியிலுள்ள தொண்ணுற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். இன்ன இன்ன தகுதிகளையும், திறமைகளையும், பட்டங்களையும் கொண்டிருக்கும் நான், இன்ன இன்ன தகுதிகளையும் இன்ன

இன்ன திறமைகளையும் கொண்டு சிறப்புற்றிருக்கும் இன்னாருக்கு எழுதும் சீட்டாவது, இதில் கண்டுள்ளவற்றை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கோரி ஒரு சீட்டு எழுதுவதாகும். பெரும்பாலும் புலவர்கள் மன்னர்களிடம் பொருள் பெற வேண்டி எழுதுவதாக அமையும்.

சீட்டுக்கவி என்பதற்கு 'ஓலைப் பாசுரம்' , 'ஓலையில் கவிவடிவில் எழுதிய கடிதம்' எனும் விளக்கமளிக்கிறது தமிழ் விக்சனரி.

சீட்டுக்கவியின் சொற்பிறப்பிடம் குறித்து ''கடிதம் என்னும் பொருளைத் தருவனவாக முற்காலத்தில் திருமுகம், ஓலைத்தூக்கு, சீட்டுக்கவி, தீட்டுகவி (தீட்டுகின்ற கவி) ஆகிய சொற்கள் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. தொடக்க காலத்தில் சீட்டுக்கவி என்பதற்குத் 'திருமுகம்' என்ற பெயரே வழங்கலாயிற்று. பிற்காலத்தில் தான் 'சீட்டுக்கவி ' என்னும் பெயர் பயன்பாட்டிற்கு வந்தது. இதனை ஆலவாய்ப் பெருமானால் இயற்றப்பட்ட திருமுகப்பாசுரம் என்பதன் பெயரைக் கொண்டு அறியலாம். 'திருமுகம்' என்பதே தொன்மைப் பெயராகக் காணக் கிடைக்கிறது'' [5] எனும் சான்று மூலம் அறியமுடிகிறது.

சீட்டுக்கவியின் மூலமுதலாய்க் கருதப்படுவது திருமுகப் பாசுரம் ஆகும். அதன் பின்னர்ப் பல புலவர் பெருமக்கள் எழுதியுள்ளனர்.

**நன்றி மறவாமை**

சிவஞான முனிவரின் மாணவரான சோமசுந்தரம் பிள்ளையைத் தம் குருவாக ஏற்றுக் கல்வி பயின்று கவி இயற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தார் சரவணப்பெருமாள் கவிராயர். தம் குருவிடம் கல்வி கற்றதை நன்றிபயக்கும் விதமாக,

''மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி
வாசற்பிர சண்ட வாக்கி
வடிதமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி
மைக்குமடி மைக்குமடிமை'' [6]

எனக் கவி பாடியுள்ளார். இவ்வாறு கவிபாடும் பெருமிதக் குணங்கள் இவரிடம் விரவிக் கிடந்தாலும் தனக்கு பாடஞ்சொல்லிய ஆசிரியரான சோமசுந்தரகுருவிடமும், சேது மன்னரிடமும் அளவற்ற பக்தியும், மரியாதையும் உடையவராகத் திகழ்ந்துள்ளார். இதனை,

''....அவ்வொன்று மவதானி தமிழொன்று வெகுமானி
யறிவொன்று சேது பதிபால்
அணியொன்று வெகுமானி சோமசுந் தரகுருவி
னருளொன்று மடிமை வெள்ளைக்
கவ்வொன்று மலைநாவ நதியொன்று கோத்திரன்
கணியொன்று குவளை மார்பன்
கதியொன்று சரவணப் பெருமாட் கவீச்சுரன்
கையொன்று மெழுது மோலை'' [7]

எனும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

சேதுநாட்டு அவைக்களப் புலவராயிருப்பினும் ஒரேயிடத்தில் தங்கியிராமல் பல இடங்களுக்குச் சென்று, தனது கவித்திறனை வெளிக்காட்டிப் பல பரிசில்கள் பெற்று வாழ்க்கை

நடத்தியுள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. மேலும் இவர் சோமசுந்தர குருவிடம் இலக்கணம் பயின்றவர் என்பதை,

**"கண்ணன்றாய் தங்கை களத்திர மாமியம்மான்**
**வண்ண மருமகளே மைத்துனனென் - றெண்ணியிவை**
**நாம நடுவெழுத்தை நாடி விலக்கணத்துக்**
**கூமனுஞ் சொல்லானோ வுரை"** [8]

எனும் வெண்பா மூலம் அறியலாம்.

**இயற்றிய நூல்கள்**

இவர் முப்பது தனிப்பாடல்களும், எட்டு நூல்களும் செய்துள்ளார். இவர் இயற்றிய தனிப்பாடல்கள் தவிர வேறு நூல்கள் எதுவும் அச்சேறவில்லை. இவரைப் பற்றிய கூடுதல் செய்திகளை இவரின் தனிப்பாடல்களின் வழி அறியமுடிகிறது.

1. இராமேசுவரம் இராமலிங்கேசர் பேரில் பணவிடு தூது
2. தருமர் அசுவமேதயாகப் புராணம்
3. விநாயகர் திருமுக விலாசம்
4. முத்தளகுசாமி மீது தூது
5. முத்திருளப்பபிள்ளை மேல் காதல்
6. விஜயரகுநாதத் தொண்டைமான் பேரில் தூது
7. அம்மைநாதன் வண்ணம்
8. ஆப்பனூர்க் குறவஞ்சி

மேற்சுட்டிய நூல்களுள் ஐந்து நூல்களில் ஒவ்வொரு பாடல் மட்டும் கிடைத்துள்ளன. அவை:

**"...சேதுபதி வாசற்ப்ர தானிமுத் திருளப்ப**
**சிங்கவே றெதிர்ந்துகாண்க**
**சித்தபரிபூரண கடாட்சவீட் சணகுண**
**தியாகபர னீயாகையாற்**
**செந்தமிழ்க் காதற்ப்ர பந்தமொன் றுன்மீது**
**செய்துவந் தனமகிழ்ந்தே..."** [9]

என முத்திருளப்பபிள்ளை மீது காதல் உணர்வோடு பாடியுள்ளார்.

**"பாதமே வாதவன் ராமநாத தேந்த்ரசம்**
**பன்னனெதிர் கொண்டுகாண்க**
**பனிமதிச் சடிலன்மே லினியபணவிடு தூது**
**பாடிவந் தனமகிழ்ந்தே..."** [10]

என இராமலிங்கேசர் பேரில் பணவிடு தூது பாடியுள்ளார்.

**"... கனபாவை நகர்மேவு சொக்கலிங் கக்கொடைக்**
**கர்னனெதிர் கொண்டுகாண்க**

கணபதி தருந்திரு முகத்தைமுன் சொன்னபடி
கண்டரங் கேற்றயன்பாக்
கனகமும் பவளமுந் தரளமுங் கோமேத
கங்களுந் தந்தருள்வையே…" [11]

என கணபதி திருமுக விலாசம் பாடியுள்ளார்.

"… மாதவன் விசயரகு நாதத் துரைத்தொண்ட
மானெதிர் நடந்துகாண்க
வரிசைபெறு தூ தொன்று பாடிவந் தனமுனது
மனமகிழ்ந் தருள்புரியவையே…" [12]

என விஜயரகுநாதத் தொண்டைமான் மீது தூது பாடியுள்ளார்.

"… தந்த்ரமுத் தளகுமரு மகனான முத்தளகு
சாமியெதிர் கொண்டுகாண்க
சார்வான தூதொன்று பாடிவந் தனமுனது
தயவுகூர்ந் தருள்புரிவையே…" [13]

என முத்தளகுசாமி மீது தூது பாடியுள்ளார்.

**கவிப்பெருமை**

இவர் தம் கவித்திறத்தால் பல்வேறு பாடல்கள் பாடிப் பரிசு பெற்றதோடு மட்டுமின்றி பல பட்டங்களைப் பெற்றுப் பிறரால் கவரப்பட்டுள்ளார்.

❖ இவர் சென்னை சென்று திரும்பியபோது சென்னை முதல் இராமநாதபுரம் வரையுள்ள சுங்கக் காவலர்க்கு **"அவதானியருள்"** என்ற பாட்டினைப் பாடி சுங்கவரி செலுத்தாது பொருளுடன் ஊர் வந்து சேர்ந்துள்ளார்.[14]

❖ திருமலைராயன் பட்டினத்திற்கு வந்து அவ்வூரார் மீது **"யெளவன மனோமணி"** என்னும் சீட்டுக்கவி பாடி அவ்வூரார் வேண்டுகோளுக்கிணங்க அங்கு அட்டாவதானம் செய்து தம் கவித்திறத்தால் ஆயிரம் பொன் சன்மானம் பெற்றார். [15]

❖ காரைக்கால் இலக்குமண முதலியார் முன்னிலையிலும் அட்டாவதனம் செய்துள்ளார். [16]

❖ கேரள நாட்டிற்குச் சென்று ஆதிகேரள இராமராஜர் மீது **"மாதுபதி , நீதிபதி "** என்ற பாடல் இயற்றினார். அம்மன்னன் அப்பாட்டில் குறித்தபடி அகத்திய முனிவரைக் கண்டு வந்த பிறகு தன்னைக் காணலாமென்று கூறிப் பின்பு பேட்டி கொடுக்கவில்லை. இவர் மாலை வரை காத்திருந்து பின்பு அட்டாவதானம் செய்து தந்தப் பல்லக்கும் மற்றும் பல பொருள்களும் பரிசு பெற்றுள்ளார். **மாதுபதி என்னும் சீட்டுக்கவியால் நவாபினுடைய பேட்டி பெற்றுச் சன்மானமும் பெற்றார்"** [17] என்பதை அறிய முடிகிறது.

**பாடப் பெற்ற சீட்டுக்கவிகள்**

சரவணப்பெருமாள் கவிராயரின் பாடல்களில் ஆசிரிய விருத்தம் பொதிந்திருக்கும். இவரால் பாடப்பட்ட ஆசிரிய விருத்தங்கள் பல. புலவொருவர் சரவணப்பெருமாள் கவிராயரின் புலமையை முத்துக்கருப்பனிடம் கூறும் முகமாக, கல்விக்குச் சமுத்திரமாகவும், கடல்மடை திறந்த வெள்ளம் போல கற்பனை பிறக்குமிடமாகவும், சொல் விளையும் தேன் களஞ்சியமாகவும், கற்பூரத்தின்

தன்மையை கொண்டவராகவும். வில்லுக்கு அருச்சுனன் போல, சொல்லுக்கு அரிச்சந்திரன் போல, வெற்றிக்கு விக்ரமாதித்தனைப் போல கவிக்கு சரவணப்பெருமாள் கவிராயரே என்று கூறுவதோடு உலகம் அனைத்தும் கவியால் வெல்லும் ஆற்றல் மிக்கவர் எனக் கூறுகின்றார். இதனை கீழ்க்காணும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

“கல்விச் சமுத்திரம் கமலால யத்தமிழ்க்
கடல்மடை திறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடம் கலைமகள் இருப்பிடம்
கவிமாரி பொழியும் மேகம்
சொல்விற் பனம்விளையும் மதுரக் களஞ்சியம்
தோன்றுகறே பூர தீபம்
சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்ட சனது
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்திரன்
வெற்றிக்கு விக்ர மார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கறுப்பண்ண
விலட்சணப் எதிர்ந்து காண்க!
மல்வெற்றி யாவென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலொன் றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்பு ரிகவே” [18]

யாழ்ப்பாணத்தில் பெரும் கொடையாளராக இருந்த வைத்தியலிங்கச் செட்டியாருக்குச் சீட்டுக்கவி பாடியுள்ளார். யானை, குதிரை, தண்டிகை, பொன், வெள்ளி, பட்டு முதலான பரிசுப் பொருட்களைத் தனது கவித்திறத்தால் பாடிப் பெற முயல்கின்றார்.

யானை வேண்டுமென்பதற்கு, வயமான கையிலே மூக்குள்ளதொன்று எனவும், குதிரை வேண்டுமென்பதற்கு திருமாலின் அவதாரத்தில் ஒன்று வேண்டுமெனவும், தண்டிகை (சிவிகை, பல்லாக்கு) வேண்டுமென்பதற்கு, வாற்புறம் ஓர் கொம்பும், தலைப்புறம் ஓர் கொம்பும் அமைந்த வாகனம் வேண்டுமெனவும், பொன் வேண்டுமென்பதற்கு வலியார் முப்புரங்களில் சுடுகின்ற பொருளொன்று வேண்டுமெனவும், வெள்ளி வேண்டுமென்பதற்கு, வாரங்களில் ஒரு கிழமை வேண்டுமெனவும், பட்டு வேண்டுமென்பதற்கு, வரமுடன் வெளுத்த சந்திரனொன்று வேண்டுமெனவும் உரைக்கின்றார். இதனை,

“இந்திரதரு யாழ்ப்பாண மேவிய வ்யித்யலிங்
கேந்திரனெதிர் கொண்டு காண்க
வயமான கையிலே மூக்குள்ள தொன்று(யானை) திரு
மாயன் பிறப்பி வொன்று (குதிரை)
வாற்புறமொர் கொம்புந் தலைப்புறமொர் கொம்புமுள
வாகனந் தன்னி லொன்று (தண்டிகை)
வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று (பொன்)
வாரமது தன்னி லொன்று (வெள்ளி)
வரமுடன் வெளுத்தசந் திரனொன்று (பட்டு) நீயின்ன

வரிசை தந்தருள் புரிவையே'' [19]

எனும் அடிகள் விளக்கும்.

நடராசமூர்த்தி ஸ்தோத்திரம்

நடராசமூர்த்தி தோத்திரம் முழுவதும் ஆசிரிய விருத்தப்பா வகையாகும். சீட்டுக்கவிகளிலே பெரும்பாலும் சேதுபதி அரசரையும் சோமசுந்தர குருவையும் பற்றிப் பாடியுள்ளார். கீழே காணுகின்ற பாடலில், கவிகளில் வந்தவர் யாவர்? எந்த ஊர்? எங்கு வந்தீர்? என்பன கவிராசரிடம் மன்னன் வினவிய வினாக்கள். இம்மூன்று வினாக்களுக்கும் தொடர்ச்சியாக கவிராசர், வடகாசி, ''மகராச னென்றுனது கீர்த்தியைக் கேட்டுன்மேன் மதுரகவி பாடி வந்தோம்'' என்பது அவ்வினாக்களுக்குக் கவிராசர் கூறிய பதிலாகும். அதன் பின்னர் அவர் சினமொழியும் பொழிந்துள்ளார். இதனை,

''வந்தவ ரியாவர்காண் கவிராச ரெந்தவூர்
வடகாசி யெங்கு வந்தீர்
மகராச னென்றுனது கீர்த்தியைக் கேட்டுன்மேன்
மதுரகவி பாடி வந்தோம்
சந்ததமும் வித்துவா நல்லர்நீ ரென்னுடைய
தாதைமூ தாதை வழியில்
தமிழ்கேட்ட தியாவர்கண் தலைமுறையி லில்லாத
தாழ்விதைச் செய்து வந்தீர்
இந்தமொழி மற்றுமொரு தரநீ ருரைக்கிலோ
இரணகள மாகு மப்பால்
ஏகுமென் றோதிரும் புல்லர்தம் பாற்செலா
தெனையாள விது தருணமே
சிந்திக்கு மன்பருக் கருண்மழை சொரிந்ததிக
செல்வாய் கொடுக்கு முதலே
தேசிகம் பூத்தவுமை நேசபொன் நம்பலவ
தேசிக சிரோ ரத்நமே'' [20]

எனும் பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

சேதுபதி மன்னனையும், தனக்குக் கல்வி புகட்டிய குருவான சோமசுந்தர குருவையும் நன்றி மறவாது விஜயரகுநாத தொண்டைமானுக்கு சீட்டுக்கவியாக எழுதியுள்ளார். கீழ்க்காணும் பாடலில் நீதியோடு கல்வியும் தெளிந்தவன்; ஞானம் நிறைந்தவன்; நன்மையை என்றும் செய்யக் கூடியவன்; அறம் மட்டுமில்லாது, கவிதையையும் பிரங்கிப்பவனெ சேதுபதி மன்னனைப் போற்றிப் பாடுகின்றார். சுந்தர விலாசம், வேதாந்த சாகரம், சித்ராவதான தமிழ், மேகஞ்சபா ரஞ்சிதம், வித்வசன சேகரம்

''நீதிபெறு கல்விப்ர தானந்தெளிந்திடு
நிதானஞா நப்ரகாச
நித்தியசு மங்களக்கவி தாப்ரசங்கமன்
னேயசுந்தர விலாசம்

வேதாந்த சாகரஞ்சித் ராவதானதமிழ்
மேகஞ்சபா ரஞ்சிதம்
வித்வசன சேகரஞ்சே துபதிவாசலில்
விளங்குநவ ரத்னதீபம்
ஸ்ரீதரன் சோமசுந்தர குருசாமியிரு
திருவடிதுதிக்கு மடிமைச்
சீர்பெறும் சரவணப்பெ ருமாள்கவிச் சுரச்செய
சிங்கமெழுது யோலை
மாதவன் விஜயரகுநாத துரைத்தொண்ட
மானெதிர்நடந்து காண்க
வரிசைபெறு தூதொன்று பாடிவந்தன முனதுமன
மகிழ்ந்தருள் புரிவையே" [21]

தமிழில் புலமை பெற்ற இவர் பல பாடல்களைப் பாடியுள்ளார். நானூறு கோவை பாடியுள்ளார் என்பதை அறிந்த இவரது நண்பர் மூன்றுபடி வரகு கொடுக்க முன்வந்துள்ளார். இதனை அறிந்த நண்பரின் மனைவி மறுப்புத் தெரிவித்து குடும்ப ஏழ்மையைத் தம் கணவரிடம் முன்வைக்கிறாள். புலவரைக் கண்டு போ..போ.. என்று சொல்கிறாள். இதனை,

"வெண்பாச்சொல் கவிஞரே வந்ததேதும்
மீதுமெய்த் தமிழ்பாடி வந்தோம்
வெகுநேர்த்தி முன்னமே நானூறு கோவையொரு
வித்துவான் பாடிவந்தான்
நண்பனாக மனம்வைத்து மூன்றுபடி பெருவரகு
நான்கொடுத்தே னதற்கிந்
நாடெலாந் தெரியுமென் மனையாட்டி மூன்றுதர
நான்றுகொண் டுயிர்பிழைத்த
புண்பாடெலா மறிந்தின்ன நீர்கவிசொலும்
புலவரென் றிங்குவந்தீர்
போம்போ மெனச்சொலிப் புலையாடு புலையரொடு
போராடவோ படைத்தாய்
தெண்பாவெ நும்பொருட் பாமாலை பூண்டுபத
சேவைதந்தருள் புரிகுவாய்
தேசிகம் பூத்தவுமைநேச பொன்னம்பலவ
தேசிகசி ரோரத்னமே" [22]

எனும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

இவர் பாடியப் பாடல்கள் அனைத்தும் கிடைக்கப் பெறவில்லை. இருப்பினும் சில பாடல்களே கிடைத்துள்ளன. அதில் திருத்தணிகை பற்றிய பாடல் ஒன்று கிடைத்துள்ளது.

வில்லிப்புத்தூராழ்வார் மகாபாரதத்தைத் தமிழில் பாடியுள்ளார். இவர் திருமுனைப்பாடியில் பிறந்தவர். பஞ்ச பாண்டவர்களின் தந்தையின் முன்னோர் பற்றி பாடியுள்ளார். பதினெட்டு நாட்கள்

நடந்த போர்க் காட்சிகளை எடுத்துரைத்து தம் பாடல்களில் பாடியுள்ளார். இத்தகு வில்லிபுத்தூராரைத் தன் பாடலில் போற்றுகிறார் சரவணப்பெருமாள் கவிராயர். இதனை,

“பைந்தமிழி னலஞ்சிறந்த முனைப்பாடித்
திருநாட்டிற் பாகை வேந்தன்
சுந்தரஞ்சேர் பாரதமாம் வடகலையைத்
தென்கலையாற் சொல்க வென்ன
சந்தனுவின் சரிதமுதற் பதினெட்டா
நாட்போரிற் சரிதங் காறும்
புந்திமகிழ் தரவில்லி புத்தூராழ்
வான்முன்பு புகன்றிட் டானே” [23]

எனும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

மேலும் சரவணப்பெருமாள் கவிராயர் சேதுபதி அவையில் பிரதானியாக விளங்கிய முத்திருளப்பப்பிள்ளை மீது காதல் பிரபந்தமொன்று பாடியுள்ளார். இப்பாடலில் முத்திருளப்பப்பிள்ளையின் சிறப்பைப் பற்றி எடுத்துரைக்கும் விதமாக கடாட்சமானவர், நற்குணமுடையவர் எனக் கூறுகின்றார். இதனை,

“சேறாடு குங்குமம் கொங்கையார் மடலெழுது
திவ்யரம ணிய மோகன்
சேதுபதிவாசற் ப்ரதானிமுத் திருளப்ப
சிங்கவே றெதிர்ந்து காண்க
சித்தபரி பூரண கடாட்சவீட் சணகுண
த்யாகபர ணீயா கையாற்
செந்தமிழ்க் காதற்பர பந்தமொன்று றுன்மீது
செய்துவந் தனம கிழ்ந்தே” [24]

எனும் பாடலடிகள் மூலம் தெரிவிக்கின்றார்.

புலவொருவர் பொருள்வேண்டி இவருக்குச் சீட்டுக்கவி ஒன்று எழுதி அனுப்பியுள்ளார். பதில் இல்லை. திட்டி அனுப்பியுள்ளார். இதனைக் கண்ட இவர் நல்லோர்க்கும், தீயோர்க்கும் ஓலையிலே கிறுக்குகின்ற எங்களையே நீ கிறுக்கனாய் ஆக்குகிறாயா என்பதை சீட்டுக்கவி வழியாகக் கீழ்க்காணும் பாடலை எழுதி அனுப்பியுள்ளார். இதனை,

“உறுக்குமதி வேந்தருக்கும், கள்வருக்கும்
நீதிதப்பி ஒளிக்கின் றோர்க்கும்
கிறுக்குவரச் செய்யுந் துரையே, பாவாணர்
ஓலையினும் கிறுக் குண்டாமோ?
பொறுக்கும் அர சுரிமை முத்து ராமலிங்க
சேதுபதி பூமி எல்லாம்
நிறுக்குமதி மந்திரி - முத் திருளப்பா
அருளாப்பா நிருபந் தானே” [25]

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது. முத்திருளப்பர் பெரும்புலமை பெற்றவராயிருந்ததால் புலவர்கள் இவ்வாறு பாடலின் மூலம் தத்தம் திறமைகளை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

**நகைச்சுவைத் திறன்**

சரவணப்பெருமாள் கவிராயரின் கவித்திறனைக் கண்டு பலர் அஞ்சியுள்ளனர். தன்னைப் பற்றிப் பேசுவோர்க்குக் கவியால் பதில் இயம்புவார். சான்றாக, இவருக்கு அஞ்சிப் பொருள் தர மனமில்லாரின் செயலைக் கண்டு நகைச்சுவையாகவும், புனைந்துரையோடு பாடியுள்ளார். இதனை,

“ஆரடி வீதியிலொ ரேடுகொண் டோடியே
யவசரம தாய்வருகிறார்
ஐயையோ புலவன்மார் போலே யிருக்கின்ற
தியாரென்று மெல்லவெட்டிப்
பாரடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும்
பாதைவழி போகிறதுதான்
பரண்மே லெனைத்தூக்கி விட்டுவிடு தாளையடை
பழிகாரி கதவுபோடு
கூர்மைமொழி கேட்டதிக சீக்கிரம் வந்திடுவர்
குதிருக்குள் ளேயொளித்துக்
கொள்ளடி யெனப்புகலும் லோபியர்கள்....” [26]

எனும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

பாடப்பட்டோரும் பாடிய இடமும்

சரவணப்பெருமாள் கவிராயர் தமிழகத்தின் பல இடங்களுக்குச் சென்று குறுநில மன்னர்கள், பிரபுக்கள் முதலியோருக்குச் சீட்டுக்கவி பாடிப் பரிசில் பெற்று தன் வாழ்வை நடத்தி வந்துள்ளார். அவற்றைக் கீழ் காணும் சான்றுகள் மூலம் அறியலாம்.

- காரைநகர் லட்சுமண மந்திரி (தனிச்: பக்.224,225)
- முத்துக்கருப்பணன் (தனிச்: ப.225)
- திருமலைராயன் பட்டினத்திலுள்ளவர்கள் (தனிச்: பக்.226,227)
- முகம்மது தம்பி (தனிச்: ப.226)
- சென்னப்பட்டணம் தெளிசிங்க பூபன் (தனிச்: பக்.226,227)
- வீரபாண்டியக் கட்டபொம்மன் (தனிச்: ப.227)
- சிவகிரி வரகுணராம செந்தொட்டிக்காளை (தனிச்: பக்.227,228)
- ரவணப்ப பூபதி (தனிச்: பக்.230,231)
- சிவகங்கைப் பகுதிப் பொதுமக்கள் (தனிச்: ப.231)
- கேரள அரசன் (தனிச்: பக்.231,232)
- சிங்கைநகர் குமாரவேல் பூபன் (தனிச்: பக்.236,237)
- யாழ்ப்பாணம் வயித்தியலிங்கம் (தனிச்: பக்.237,238)
- திருவனந்தபுரம் அரசர் (தனிச்: பக்.239,240)

(மேற்சுட்டிய பட்டியல் "சேது மன்னர்களின் தமிழ்ப்பணி" எனும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.)

பெரும்பாலும் தனது வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளைப் பாடல் வழியாகவே பாடி வந்துள்ளார். சிவகங்கை அரசர் கௌரி வல்லபராசருக்கு சீட்டுக்கவி ஒன்று எழுதியுள்ளார். இதில் அரியலூர் வீரன், புதுச்சேரி ஆனந்தநாதன், அசரது நவாப், கடலாடி முத்துக்கருப்பன், காரைக்கால் லெட்சுமண முதலியார், கவித்தலம் முத்தைய மூப்பன், பிச்சாண்டி செட்டி, முகம்மதுத்தம்பி, திருவையாற்றுச் சுப்பிரமணியபிள்ளை ஆகியோரைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

## தொகுப்புரை

- முருகக் கடவுள் சரவணனையும், வைணவக் கடவுள் பெருமாளையும் தம் பெயருடன் இணைத்து **'சரவணப் பெருமாள்'** எனத் தம் பெயரை ஆக்கிக் கொண்ட இப்புலவர் சைவ சமயத்தைச் சார்ந்தவராகவும், சிவன் மீது பற்றுடையவராகவும் விளங்குகிறார் என்பதை அறிய முடிகிறது.
- நகைச்சுவை குணம் இவரிடமிருப்பினும், யாருக்கும் அஞ்சாமல் சினத்துடன் எதிர்த்துப் பேசும் துணியுடையவராகத் திகழ்ந்துள்ளார்.
- இவரின் கவிப்புலமையை காளமேகப் புலவரின் பாடல்களுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளது.
- இலக்கண வரம்பு மீறுதலின்மை, சொல்லழகு, பொருளழகு ஆகியன இவரது பாடல்களில் குறைவின்றி அமைந்திருப்பது இவரது புலமையைப் பறை சாற்றும்.
- வண்டமிழ் நாவலர் பலரில் இவரும் ஒருவரென, அப்துல் காதிறு ராவுத்தர் புவனேந்திர காவியத்தில் கூறியுள்ளார்.
- தனக்குப் பாடஞ்சொன்ன குருவிற்கு நன்றிகூறும் முகமாகத் தாம் பாடிய பாடல்களில் நினைவுகூர்ந்துள்ளார். அதுமட்டுமின்றி, சேதுபதி மன்னரைப் பற்றியும் தம் பாடல்களில் உயர்வாகக் கூறியுள்ளார்.
- ஒரே இடத்தில் தங்காது பல்வேறு இடங்களுக்குச் சென்று வாழ்க்கையைக் கழித்துள்ளார். மேலும் கேரள நாட்டிற்குச் சென்று ஆதிகேரள இராமராஜர் மீது பாடல் பாடியுள்ளார். அதே போல் யாழ்ப்பாணம் வைத்தியலிங்கச் செட்டியாருக்குச் சீட்டுக்கவியும் பாடியுள்ளார். புதுச்சேரி ஆனந்தநாதன், காரைக்கால் லெட்சுமண முதலியார் மீதும் பாடல் பாடியுள்ளார்.
- வில்லுக்கு அருச்சுனன், சொல்லுக்கு அரிச்சந்திரன், வெற்றிக்கு விக்ரமாதித்தன் போல் கவிக்குச் சரவணப்பெருமாள் கவிராயர் எனும் சிறப்பினைப் பெற்றுள்ளார்.
- தான் விரும்பிய பரிசுப்பொருட்களைப் பாடல் வழியாக முன்வைத்து நேரடியாகக் கேட்கும் பழக்கமுடையவராகத் திகழ்ந்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.
- யாராகயிருப்பினும் தம் கவித்திறமையால் வாதம் செய்து வெல்லக்கூடிய திறன் இவரிடம் பொதிந்திருப்பதை அறியமுடிகிறது. மேலும் நகைச்சுவைத் திறன் மிக்கவராய்த் திகழ்ந்துள்ளார்.
- வீரபாண்டிய கட்டபொம்மன் மீது பாடல் பாடியுள்ளார்.
- முத்திருளப்ப செட்டியார், வில்லிபுத்தூரார் குறித்து போற்றிப் பாடியுள்ளார்.

*[சரவணப்பெருமாள் கவிராயர் எவருக்கும் அஞ்சாத துணிச்சலுடையவராகவும், தம் கவித்திறத்தால் அனைவரின் மனதில் இடம்பிடித்தவராக விளங்கியுள்ளார். இவரால் எழுதப்பட்ட எட்டு நூல்கள் மற்றும் தனிப்பாடல்கள் முழுவதும் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும் பல்வேறு நூல்களில் ஆங்காங்கே உதிரிப்பூக்களாக தனிப்பாடல்கள் மட்டும் சிறிதளவு கிடைத்துள்ளன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற பாடல்களை வைத்தே இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு தனிப்பாடல் தொகுப்பு நூல்களை உற்றுநோக்கினால் இவரைப் பற்றிய கூடுதல் செய்திகள் கிடைக்கக்கூடும்].*

சான்றெண் விளக்கம்

1. கி.கோதண்டபாணி, புல்லையந்தாதி, ப.5
2. கா.சு.பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு,ப.442
3. கா.சு.பிள்ளை (உ.ஆ), பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு, முன்னுரை
4. சுப்பையாபிள்ளை,புவனேந்திர காவியம், ப.3
5. ...., தமிழில் கடித இலக்கிய வரலாறும் இயேசு சபை மடலாளிகளின் வாழ்க்கைச் சூழலும், ப.3
6. புலவர் சரித்திரம் (தொகுதி ஐந்து), ப.55
7. செ.கந்தசாமி, சேது மன்னர்களின் தமிழ்ப்பணி,ப.55
8. எச்.வைத்தியநாதன், (ப.ஆ.), பிற்காலப்புலவர்கள், ப.151
9. செ.கந்தசாமி, சேது மன்னர்களின் தமிழ்ப்பணி,ப.56
10. மேலது, ப.56
11. மேலது, ப.56
12. மேலது, ப.56
13. மேலது, ப.56
14. எச்.வைத்தியநாதன், (ப.ஆ), பிற்காலப்புலவர்கள், ப.150
15. மேலது, ப.151
16. மேலது, ப.151
17. மேலது, ப.151
18. தமிழக பள்ளிப் பாடநூல். ப.60
19. தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம், ப.76
20. அ.அறிவொளி (உ.ஆ), தனிப்பாடல் திரட்டு, ப.543
21. கா.சு.பிள்ளை (உ.ஆ), பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு. பக்.34,35
22. மேலது, ப.31
23. எச்.வைத்தியநாதன், (ப.ஆ), பிற்காலப்புலவர்கள், பக்.150,152
24. மீ.மனோகரன், கிழவன் சேதுபதி, ப.159
25. மேலது, ப.160
26. கா.சு.பிள்ளை, தமிழிலக்கிய வரலாறு, பக்.442,443

துணைநூற்பட்டியல்


- அறிவொளி ஆ (உ.ஆ), தனிப்பாடல் திரட்டு, 2008, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- இராமசாமிப் புலவர் சு.அ, 1956, தமிழ்ப் புலவர் வரிசை (ஐந்தாம் பகுதி), சைவ சித்தாந்த நூற்ப்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
- கந்தசாமி செ, சேது மன்னர்களின் தமிழ்ப்பணி, 2012, நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை.
- கந்தையா ந.சி., தமிழ்ப் புலவர் அகராதி, 2009, அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
- கோதண்டபாணி (ப.ஆ.), புல்லையந்தாதி, 2016, சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம், தஞ்சாவூர்.
- சிரஞ்சீவி (ப.ஆ), கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடுதூது, ப.228
- சுப்பையா பிள்ளை, புவனேந்திர காவியம், 1908, மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திர சாலை.

- பிள்ளை கா.சு.(உ.ஆ), பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு (பகுதி -2), கழக வெளியீடு, சென்னை.
- பிள்ளை கா.சு., இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்), 1953, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- மனோகரன் மீ, கிழவன் சேதுபதி, 2012, அகரம் பதிப்பகம், தஞ்சாவூர்.
- வைத்தியநாதன்.எச், (ப.ஆ.), பிற்காலப்புலவர்கள், (பதிப்பு விவரம் இல்லை).
- ...., தமிழில் கடித இலக்கிய வரலாறும் இயேசு சபை மடலாளிகளின் வாழ்க்கைச் சூழலும்.
- ......., ஒன்பதாம் வகுப்புப் பாடநூல்.
- ..., தமிழ்ப் புலவர் சரித்திரம், (பதிப்பு விவரம் இல்லை).